# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2017 ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம்** 2017.07.18 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/69)**

அ. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 யூன் 06 ஆந் திகதி வரை ஹோமாகமை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அந்த எல்லா வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக

I. செயற்றிட்டத்தின் பெயர்
II. ஏற்பாட்டு நிதி கிடைக்கும் வழி
III. மதிப்பிடப்பட்ட நிதி
IV. செயற்றிட்டம் டென்டர் மூலமாக வழங்கப்பட்டது அல்லது வேறு முறையிலா வழங்கப்பட்டது என்பது
V. இறுதியாக ஒப்பந்தத்திற்கு தீர்மானிக்கப்பட்ட நிதி
VI. செயற்றிட்டத்தை மேற்கொண்டவர்களின் பெயர் மற்றும் முகவரி
VII. வேலை ஆரம்பிக்கப்பட்ட தினம்
VIII. வேலை நிறைவு செய்யப்பட்ட தினம்
IX. கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் அத் திகதி

ஆகியவை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றினை சமர்ப்பிப்பீர்களா

இ. மக்கள் பிரதி நிதிகளின் நிர்வாகம் காணப்படாத நிலைமையில் நகர சபையின் ஏற்பாட்டினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் எவை என தீர்மானிப்பவர்கள் யார் ?

ஈ. அபிவிருத்தி செய்யப்படாத எனினும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள் காணப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. முன்னுரிமைக்கு இணங்க இனங்காணப்பட்ட வீதிகளின் அபிவிருத்திக்கு வேலைத் திட்டம் ஒன்று காணப்படுகின்றதா ?

ஊ. எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகளை முன்னுரிமையின் அடிப்படையில் பெயர் குறிப்பிட முடியுமா ?

எ. இதற்கிணங்க வீதிகள் தொடர்பான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிப்பீர்களா ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**02.** **கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம்** 2017.07.18 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Íæ/vi (1)17/74)**

அ. பத்தரமுல்லை மற்றும் கடுவெல பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் கஷ்டமாக நட்டத்தில் இயங்குகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இவ் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களினதும் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 4 வருடங்களுக்கு உரியதான சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை வருடா வருடம் வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

இ. இக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த 4 வருட காலத்தினுள் தொடர்ச்சியாக நட்டத்தில் நடாத்தப்பட்டமைக்கு உரிய காரணத்தினை நீங்கள் அறிவீர்களா ? அறிவீர்களாயின் நட்டம் அடையக் காரணம் என்ன ?

ஈ. இவ் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களினதும் ஊழியர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ? கடுவெல மற்றும் பத்தரமுல்லை சங்கங்கள் இரண்டினதும் பிரதேச வியாபார நிலையங்கள் எத்தனை ? அப் பிரதேச வியாபார நிலையங்களில் எத்தனை வெளி நபர்களுக்கு வாடகைக்கு அல்லது குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன ? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவற்றை வெவ்வேறாக குறிப்பிடுங்கள் ?

**03.** **கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.07.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/75)**

அ. பத்தரமுல்லை மற்றும் கடுவெல பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினதும் ஊழியர்களின் படியினைச் செலுத்துவதற்கு போதுமான அளவு வருமானம் ஒன்று காணப்படுகின்றதா ? அப்படி இல்லையாயின் அதற்குக் காரணம் என்ன ?

ஆ. இச் சங்கங்களின் வாடிக்கையாளர் பிரிவில் மட்டும் சொத்துக்களும் பொறுப்புக்களும் எவ்வளவு என்பதை நீங்கள் அறிவீர்களா ? அவற்றினை வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

இ. பத்தரமுல்லை மற்றும் கடுவெல ஆகிய இரண்டு சங்கங்களினதும் கிராமிய வங்கிப் பிரிவில் கடந்த 4 வருட காலத்தினுள் சங்கம் கடனைப் பெற்றுக் கொண்டுள்ள முறையினை நீங்கள் அறிவீர்களா ? அப்படியாயின் வெவ்வேறாக குறிப்பிடுங்கள் ?

ஈ. இக் கடனினை செலுத்துவதற்காக இவ் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களினதும் பணிப்பாளர் சபை இவ் வேளையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாது ?

உ. பத்தரமுல்லை பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கத்தில் இறுதி தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ள முறைகேடுகள் மற்றும் சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டத்தினை நீங்கள் அறிவீர்களா ? அந் நிலைமையினை வெவ்வேறாக தெளிவுபடுத்துங்கள் ?

ஊ. அந் நபர்கள் தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

எ. கடுவெல மற்றும் பொதுச சேவை கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினதும் தற்போதைய பணிப்பாளர் சபை எதன் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளது ?

ஏ. இவ் இரண்டு சங்கங்களினதும் உத்தி யோகபூர்வ காலம் நிறைவடைந்துள்ள படியால் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஐ. அதனை எக் காலத்தில் மேற்கொள்வீர்கள் ?

**04.** **கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.07.18 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/76)**

அ. பத்தரமுல்லை மற்றும் கடுவெல பொதுச் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கும் அண்மையில் நியமிக்கப்பட்ட (சில தினங்களுக்கு முன்னர்) தவிசாளர் எதன் அடிப்படையில் நியமிக்கப்பட்டார் ?

ஆ. அவர் வெளிநாடு சுற்றுலாவில் ஈடுபட்டு உள்ளாரா ? அதற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ? அச் செலவு எப் பிரிவினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது ?

இ. பத்தரமுல்லை கடுவெலை கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிலும் கடந்த 5 வருட காலத்தினுள் முன்னைநாள் பணிப்பாளர் சபை எத்தனை தடவைகள் வெளிநாட்டு சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளது ?

ஈ. அதற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது எனவும் உரிய சுற்றுலாவின் செலவு சுற்றுலாவில் பங்குபற்றிய பணிப்பாளர் ஆகிய சரியான தகவல்களை இந்த கௌரவ சபைக்கு வெவ்வேறாக சமர்ப்பிப்பீர்களா ?

உ. பத்தரமுல்லை கடுவெலை ஆகிய சங்கங்களிலும் இறுதியாக தேர்தலில் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட முடிவின் காரணமாகவே இவ்வாறான மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. அப்படி இல்லையாயின் ஏன் ?

**<u>நடவடிக்கை ஒழுங்கு விதி இல 31(அ) (1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கொடுப்பதற்கு காலம் கேட்கப்பட்ட கேள்விகள்</u>**

**05. கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2017.08.08 ஆந் திகதி சபை ஒத்திவைப்பு வேளையில் கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)17/ADG-06)**

அ. போக்குவரத்து அதிகார சபையின் சில நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் முறையற்றன என்பதனை அறிவீர்களா ? அந் நியமனங்களை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ஆ. தற்போதைய தவிசாளர் மேற்கொண்ட நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக கணக்காய்வு அல்லது பிற விசாரணை ஒன்றினை மேற்கொண்டீர்களா ? முடிவினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

இ. ஒழுங்குவிதிக்கு முரணான நியமனம் மற்றும் பதவி உயர்வுகளுக்கு தவிசாளர் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

ஈ. பதில் கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதி பிரதி முகாமையாளர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

உ. உங்களது மக்கள் தொடர்பாடல் உத்தியோகத்தர் ஜீவிந்திர கீர்த்திரத்ன அவர்களுக்கு நிர்வாக உத்தியோகத்தர் (பயணம்) பதவியினை பெற்றுக் கொடுப்பதற்கு நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டதா ? இல்லையாயின் ஏன் ?

ஊ. தவிசாளர் நியமித்த முகாமைத்துவ உதவியாளரும், காரியாலய உதவியாளரும் அதிகார சபைக்கு வருகை தராது தவிசாளரின் புளத்சிங்ஹல அரசியல் காரியாலயத்திற்கு கடமைக்குச் செல்கின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

எ. ஐந்து வருடங்கள் அனுபவம் தேவையான உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு மூன்று வருடங்கள் அனுபவம் உள்ள புலத்சிங்ஹளவைச் சேர்ந்த ஒருவரும், தகவல் அமைப்பின் உதவியாளராக ஜா-எலயைச் சேர்ந்த ஒருவரும் அரசியல் தொடர்பினாலே நியமிக்கப்பட்டனர் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? ஏற்றுக் கொள்ளவில்லையாயின் காரணம் என்ன ?

ஏ. சாரதி பாடசாலையின் அதிபரின் பதவி உயர்வு மற்றும் பயிற்சி ஆராய்ச்சி அத்துடன் திட்டமிடல் பிரிவின் முகாமையாளர் ஒழுங்கான விசாரணை சபை ஒன்று இல்லாமலேயே நியமிக்கப்பட்டார் என்பதனை அறிவீர்களா ? அச் சபையின் புள்ளிகளை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**06. கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/78)**

அ. மஹரகம நகர சபைக்கு உரிய நாவின்ன விளையாட்டு மைதானத்தின் நீச்சல் தடாகம் எவ் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது ?

ஆ. அந் நீச்சல் தடாகம் எத் தாபனத்தின் மூலம் கட்டப்பட்டது ?

இ. கடந்த இரண்டு வருட காலத்தினுள் இந் நீச்சல் தடாகத்திற்காக உங்கள் அமைச்சினால் எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

ஈ. அவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ள போதும் ஏன் இன்னும் அது நிறைவு செய்யப்படவில்லை ?

உ. இந் நீச்சல் தடாகத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஊ. எந்த செலவுத் தலைப்பின் கீழ் இந் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

**07. கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/79)**

அ. 2016 ஆம் ஆண்டிற்கு மேல் மாகாண சபை வரவு செலவுத் திட்டத்தினால் விளையாட்டு அமைச்சுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஆ. அந் நிதியில் மேல் மாகாண சபை பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

இ. மாகாண சபை விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஈ. மேல் மாகாணத்தின் விளையாட்டு கழகங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

உ. அவ் விளையாட்டு கழகங்கள் எம் மாவட்டங்களுக்கு உரியன ?

ஊ. மிகுதி நிதியின் அளவு எவ்வளவு ?

எ. மாகாண சபை உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

ஏ. எந்த உறுப்பினர்களுக்காக ?

**08. கௌரவ எச்.எம். உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/80)**

அ. 2016 ஆம் ஆண்டிற்கு மேல் மாகாண சபை வரவு செலவுத் திட்டத்தினால் விளையாட்டு அமைச்சுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

ஆ. அந் நிதியில் மேல் மாகாண சபையின் பாடசாலைகளின் விளையாட்டு மைதானங்களுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

இ. உள்ளூராட்சித் தாபனங்களின் எத்தனை விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன ?

ஈ. மாகாண சபை விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது ?

உ. மேல் மாகாணத்தின் விளையாட்டு கழகங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

ஊ. அவ் விளையாட்டு கழகங்கள் எம் மாவட்டங்களுக்கு உரியன ?

எ. மிகுதி நிதியின் அளவு எவ்வளவு ?

ஏ. மாகாண சபை உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா ?

ஐ. எந்த உறுப்பினர்களுக்காக ?

**09. கௌரவ நிரோஷன் பாதுக்க உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/81)**

அ. மொரட்டுவை முன்னை நாள் நகர பிதா தொடர்பாக நியமிக்கப்பட்ட தனி நபர் ஆணைக்குழுவின் முடிவு யாது ?

ஆ. குற்றவாளிகள் இருக்கின்றனரா ? அது தொடர்பாக எடுக்கும் முடிவு என்ன ?

இ. அறிக்கையினை சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**10.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/82)**

அ. கட்டான பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் சபைக்கு உரிய குளங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. (i) இப் பிரதேச சபையின் அதிகார பிரதேசத்திற்கு உரிய ஐவன் த சில்வா மாவத்தையின் தனிப்பட்ட இடமொன்றில் குளம் ஒன்றினை அமைத்து சபைக்கு நன்கொடையாக வழங்குமாறு கட்டான பிரதேச சபையினால் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டுள்ளதா ?

(ii) தென்னை செய்கையைத் தவிர வேறு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளப்படாத பிரதேசம் ஒன்றில் இவ்வாறான குளம் ஒன்றினைக் கட்டி சபைக்கு நன்கொடையாக வழங்குமாறு சபையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் எதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது ?

இ. அக் குளத்தினை கட்டி சபைக்கு நன்கொடையாக வழங்குமாறு கட்டான பிரதேச சபையின் முன்னைநாள் தவிசாளர் மற்றும் பிற அரசியலாளர் ஒருவரினால் உரிய காணியின் உரிமையாளருக்கு வேண்டுகோள் ஒன்று விடப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. குளத்தைக் கட்டுதல் என்ற போர்வையில் ஆற்றில் இருந்து போடப்பட்ட மண்ணை பயன்படுத்தி சேற்று நிலங்கள் நிரப்பப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. இக் குளத்தினை நிர்மாணிப்பது தொடர்பான எல்லா நடவடிக்கையும் ஏமாற்று நடவடிக்கை என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஊ. இம் முறைகேடான நடவடிக்கைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடைய பகுதியினருக்கு எதிராக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**11.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/83)**

அ. கட்டான பிரதேச சபையின் முன்னைநாள் தவிசாளர் மற்றும் பிற அரசியல் வாதியின் வேண்டுகோளுக்கு இணங்க ஐவன் த சில்வா மாவத்தையில் சிக்கல் மிக்க ஏலக் காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குளம் சுற்றாடல் பிரச்சினைகள் பலவற்றுக்கு காரணமாகியுள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. (i) அக் காணியில் குளத்தினைக் கட்டி சபைக்கு நன்கொடையாக வழங்க விருப்பத்தைத் தெரிவித்த உரிமையாளரினால் குளத்தின் மண்ணைப் பயன்படுத்தி காணிகளை நிரப்பிய பின்னர் அக் காணிகளை துண்டுகளாக்கி விற்பதற்கு கட்டான பிரதேச சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா ?

(ii) 2012.05.03 ஆந் திகதி தொடக்கம் ஐந்து வருடங்கள் செல்லும் வரை துண்டுகளாக்கப்பட்ட திட்டத்திற்கு உரிய நிபந்தனைகளை நிறைவேற்றாமை தொடர்பாக கட்டான பிரதேச சபை எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

(iii) காணி விற்கப்பட்டு ஐந்து வருடங்கள் செல்லும் வரை துண்டுகளாக்கப்பட்ட காணியின் வரைபடத்தை அங்கீகரிக்காமல் இருந்ததன் ஊடாக கொள்வனவாளர்களுக்கு பல கஷ்டங்களுக்கு முகங்கொடுக்க ஏற்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

(iv) இக் கொள்வனவாளர்களுக்கு நீதி ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

இ. இக் காணியில் குளத்தினை கட்டியது தொடக்கம் காணிகளைத் துண்டுகளாக்கி விற்றது வரை நிகழ்ந்துள்ள முறைகேடுகள் தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**12.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/84)**

அ. மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய வீதிகளில் வாகனங்கள் பயணிக்கக் கூடிய உச்சமான சுமை மற்றும் வேகம் ஒன்று காணப்படுகின்றதா ?

ஆ. 05 தொன்களை விட கூடிய சுமை ஏற்றப்பட்ட வாகனங்கள் பயணிக்க முடியாத வீதிகளில் பாரிய அளவு சுமைகளைத் தாங்கிய வாகனங்கள் பயணிக்கின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா?

இ. இந்த சட்டத்திற்கு முரணான நடவடிக்கையின் காரணமாக பாரிய அளவு நிதியை செலவு செய்து காப்பட் இடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் மிகவும் விரைவாக அழிவடைகின்றன என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா ?

ஈ. ஹோமாகமை முல்லேகம ஒருவல வீதி இவ்வாறு கொண்டு செல்லக் கூடாத உச்ச அளவான பாரத்தை விட அதிக சுமையினை கொண்ட பாரிய அளவான டிப்பர் வண்டிகள் பயணத்தில் ஈடுபட்டதனால் காப்பட் இடப்பட்ட வீதி அழிவடைந்துள்ளது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

உ. இந் நடவடிக்கையினை மாற்றுவதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ? இல்லையாயின் ஏன் ?

**13.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/85)**

அ. (i) களுத்துறை மாவட்டத்தின் மத்துகம கல்வி வலயத்தில் காணப்படும் மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(ii) அதில் தேசிய பாடசாலைகள் எவ்வளவு ?
(iii) மாகாண பாடசாலைகள் எவ்வளவு ?

ஆ. (i) மத்துகமை வலயத்தில் 2016 க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(ii) இப் பரீட்சைக்கு தோற்றிய தேசிய பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(iii) இப் பரீட்சைக்கு தோற்றிய மாகாண பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. (i) மேற் கூறப்பட்ட பரீட்சைக்கு தோற்றிய மொத்தப் பிள்ளைகளில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(ii) அது தேசிய பாடசாலை மட்டத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(iii) சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத சதவீதம் எவ்வளவு ?
(iv) அது மாகாண பாடசாலை மட்டத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(v) சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத சதவீதம் எவ்வளவு ?

**14.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (Îæ/vi (1)17/86)**

அ. (i) களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை கல்வி வலயத்தில் காணப்படும் மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(ii) அதில் தேசிய பாடசாலைகள் எவ்வளவு ?
(iii) மாகாண பாடசாலைகள் எவ்வளவு ?

ஆ. (i) ஹொரணை வலயத்தில் 2016 க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(ii) இப் பரீட்சைக்கு தோற்றிய தேசிய பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?
(iii) இப் பரீட்சைக்கு தோற்றிய மாகாண பாடசாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. (i) மேற் கூறப்பட்ட பரீட்சைக்கு தோற்றிய மொத்தப் பிள்ளைகளில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(ii) அது தேசிய பாடசாலைகள் மட்டத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(iv) சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத சதவீதம் எவ்வளவு ?
(v) அது மாகாண பாடசாலைகள் மட்டத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத அளவு எவ்வளவு ?
(v) சித்தியெய்திய மற்றும் சித்தி எய்தாத சதவீதம் எவ்வளவு ?

**15.** **கௌரவ மஞ்சுல பிரசன்ன சம்பத் உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)17/87)**

அ. (i) பியகம பிரதேச சபைக்கு உரிய எத்தனை பொது விளையாட்டு மைதானங்கள் காணப்படுகின்றன ?
(ii) அவை யாவை ?
(iii) அவற்றில் இணங்காணப்பட்ட குறைபாடுகள் உள்ளனவா ?
(iv) அக் குறைபாடுகளை திருத்த எடுக்கும் நடவடிக்கைகள் யாவை ?

ஆ. (i) பியகம பிரதேச சபைக்கு உரிய பொதுக் காணி தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளதா ?
(ii) வழங்கப்பட்டிருந்தால் அவை யாவை ?
(iii) அதற்காக நீங்கள் எடுக்கும் எதிர்கால நடவடிக்கை என்ன ?

இ. (i) பியகம பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தினுள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை எவ்வளவு காணிகள் ஏலத்தில் இடப்பட்டுள்ளன ?
(ii) அக் காணிகளின் மொத்த அளவு யாது ?
(iii) அக் காணிகள் யாவற்றுக்கும் பொது வசதிகள் வழங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளனவா ?
(iv) இவ் ஏலக் காணிகளில் 10% பூமிப் பிரதேசம் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதா ?
(v) இக் காணிகளின் ஏலத்தின் மூலம் பியகம பிரதேச சபைக்கு 2015 தொடக்கம் இது வரை எவ்வளவு குத்தகை நிதி கிடைத்துள்ளது ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

"இன்றைய தினம் (2017.08.22 ஆந் திகதி) கலைந்து சென்ற பின்னர் இச் சபை 2017.09.04 ஆந் திகதி (திங்கள்) மு.ப 09.30 க்கு, கூட வேண்டியதுடன், 2017.09.05 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகக் கருதி செயற்பட வேண்டும்."

## X. சபை நடவடிக்கை I

**கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

**பிரேரணை** :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

## சபை நடவடிக்கை II

<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :

**பிரேரணை** :

"2017.08.09 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் கிடைக்கப் பெற்ற முடிவிற்கு இணங்க இன்றைய தினம் (2017.08.22) ஆந் திகதி சபைக் கூட்டத்தின் பொது நடவடிக்கை விடய செயற்பாடுகளின் முன்னுரிமை ஒழுங்கு நிகழ்ச்சி நிரலில் விடய இலக்கம் 02, 01 என்ற முறையில் இடம்பெற வேண்டும் எனக் கருதி செயற்பட வேண்டும்."

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ நிரோஷா அத்துகோரல அவர்கள்

இலங்கையின் சனத்தொகையில் 51% ஐ விட அதிகமானோர் பெண்களாவர். அவ்வாறே இலங்கையின் பொருளாதாரத்தில் அதி கூடிய அளவு பங்கு வகிக்கும் வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களின் ஊடாக நாட்டுக்குள் வரும் செல்வத்திலும் அதிகளவான பங்கினை கொண்டுவருபவர்களும் பெண்களாவர் மேலும் கடந்த காலங்களில் இலங்கையில் பெண்களை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கு கௌரவம் கிடைக்குமாறு கட்டியெழுப்பப்பட்ட சமூக பொருளாதார அமைப்பும் உரிமையாகி இருந்தது.

விடயம் அவ்வாறு இருந்தாலும் தற்போது இலங்கையினுள் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் இடம்பெறும் முறைகேடுகளும் மற்றும் அநீதிகளுக்கும் மிகவும் விரைவாக உயர்ந்து சென்று கொண்டு இருக்கின்றன. பெண்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் கொலைகள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையில் பெண்களில் 75% வீதமானவர்களுக்கு பல்வேறுபட்ட முறைகேடுகளுக்கு உட்படுகின்றனர் என பீபீசி உலக சேவை அண்மையில் நடாத்திய விசாரணை அறிக்கையில் வெளியாகியுள்ளது. மேலும் சேவை நிலையங்களில் பெண்கள் பாலியல் ரீதியில் முகம் கொடுக்கும் மிகவும் கொடூரமான கஷ்டமான சந்தர்ப்பங்கள் அதிகளவாக அறிவிக்கப்பட்டுள்ளன. இலங்கையினுள் பிள்ளைகளுக்கு இடம் பெறும் முறைகேடுகளுக்கு கொடதெனியாவே சேயா சந்தமினி சிறுமியின் மரணம் ஓர் உதாரணமாக காணப்படுகின்றது.

இங்கு இடம்பெறும் மிக முக்கியமான விடயம் என்னவென்றால் பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு இடம்பெறும் குற்றங்களின் எண்ணிக்கை மிகவும் உச்ச அளவில் காணப்பட்டாலும், அதி அறிவிக்கப்படும் அளவு குறைவடைவதும் அவ்வாறு அறிவிக்கப்பட்டும் சம்பவங்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள் அதை விட குறைந்த அளவாகவும் காணப்படுகின்றது. சட்ட நடவடிக்கை எடுக்கும் போது காணப்படும் தாமதம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாட்டாளர்களுக்கு (முறைகேடுகளுக்கு உட்பட்ட பெண்களுக்கு) இடம்பெறும் இடையூறுகளே இதற்கு உரிய அடிப்படைக் காரணமாகும். பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு ஏற்படும் அநீதி மற்றும் முறைகேடுகள் தொடர்பாக முறைப்பாட்டினை எழுதுவது தொடக்கம் ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் முறைப்பாட்டினை எழுதும் போது பெண்களுக்கு மீண்டும் மீண்டும் இடம்பெறும் பிரச்சினைகளை புதிதாக குறிப்பிட வேண்டியதில்லை.

இதற்குத் தீர்வு ஒன்றாக பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் நிர்வகிக்கப்படும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்ட பொலிஸ் நிலையம் ஒன்றினை எல்லா மாவட்டங்களிலும் ஸ்தாபிக்குமாறு மேல் மாகாண சபை அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.

**(பி/vi(1)17/04)**

### 02. கௌரவ நிமல் சந்திரரத்ன அவர்கள்

இலங்கையில் அரசாங்கங்கள் காலத்திற்கு காலம் மாற்றம் அடைவதன் கீழ் கல்வித் துறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்ற படியால் இலங்கையினுள் தேசிய கல்விக் கொள்கை ஒன்றினை தயாரிக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபை அரசிடம் கேட்டுக் கொள்கின்றது.

**(பி/vi(1)17/05)**

## XII. பொது நடவடிக்கை

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

**பிரேரணை** :

"**மேல் மாகாணத்தின் 2017 இன் ............. ஆம் இலக்கம் உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரங்களைச் செயற்படுத்தும் நியதிச் சட்டம்**"

[இரண்டாம் முறை வாசித்தல்]

நியதிச் சட்ட நகல் பிரதி 2017.05.23 ஆந் திகதி முதலாம் முறை வாசிக்கப்பட்டது.

உரிய இணைப்புக்கள் இலக்கம் 01 - (2017.05.23 ஆந் திகதி முதலாம் முறை வாசிக்கப்பட்ட நகல் பிரதி

இலக்கம் 02 - சட்ட நியதிச் சட்ட செயற்குழுவின் 2017.07.18 ஆந் திகதி அறிக்கை

**02.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர்** (மே.மா)

**பிரேரணை** :

"**மேல் மாகாணத்தின் 2017 இன் ............. ஆம் இலக்க பொருட்களை அடவு பிடிப்பவர்களின் (திருத்த) நியதிச் சட்டம்** "

[முதலாம் முறை வாசித்தல்]

2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பொருட்களை அடவு பிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தினை திருத்துவதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும்.

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2017.08.09 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.